(ஆ) குன்னூர் தொகுதி, குன்னூர் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த தேவைப்படும் மாற்று இடம் இல்லாத காரணத்தால் நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய வளாகத்திற்குள் தற்போது பயன்பாட்டிலுள்ள தீயணைப்புத் துறையின் கட்டமைப்புகளை வேறு இடத்திற்கு மாற்றம் செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணிகள் நிறைவேற்றப்பட்டவுடன் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. ராமச்சந்திரன் அவர்கள், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 227, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

227—

மகளிர் கலைக் கல்லூரி

***8881—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குச் சொந்தமான இடத்தில் அரசு மகளிர் கலைக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின்

2012 மே 8]

பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரும்பாகக்கூட இல்லாத தமிழக நிதியைத் தூணாக உயர்த்தி, துறைதோறும் நல்ல திட்டங்களைத் தீட்டி, இரும்பாக உழைத்து, கரும்பாக இனித்து, அரும்பாக மணக்கின்ற மாசற்ற மக்கள் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய புனித மலர்ப் பாதங்களைப் பணிவோடு வணங்கி, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி, கூடுவெளி கிராமத்தில் 2006 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி, திரு. சிவ முத்துக்குமரப்பிள்ளை அவர்கள், தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கு 49.19 ஏக்கர் நிலத்தை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக தானமாக வழங்கியுள்ளார்கள். அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கின்ற நாகை, தஞ்சை, அரியலூர் மக்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகுமாறன், அங்கே எல்லோரும் வசிக்கிறார்கள். நீங்கள் ஒவ்வொன்றாக* analyse *பண்ண வேண்டாம். கேள்விக்கு வாருங்கள்,* please.

திரு. என். முருகுமாறன்: *கூடுவெளி பகுதியில் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காட்டுமன்னார்கோவில், கூடுவெளியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது என்ற ஒரு கருத்தினைச் சொல்லியிருக்கிறார்கள்.*

அந்த இடத்தைப் பொறுத்தவரையில், அங்கே இருக்கக்கூடிய திரு. சிவ முத்துக்குமரப்பிள்ளை என்பவர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் நலனுக்காக மட்டுமே அந்த இடத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும், அரசாங்கத்தின்மூலமாக வீடு கட்டுவதற்கோ, அரசாங்கத்தின்மூலமாக வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கோ, பள்ளிக்கூடம் கட்டுவதற்கோ அந்த இடத்தைப் பயன்படுத்தக் கூடாது என்றும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் நலனுக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்றும் எழுதிக் கொடுத்திருக்கிறார். கல்லூரி என்பது பொதுவாக அனைத்துப் பிரிவினரும் படிக்கக்கூடியதாகும். ஆகவே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கல்லூரி அமைப்பதற்கு வாய்ப்பு இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்நுட்பப் பயிற்சி நிலையமோ அல்லது கல்லூரிச் சாலையோ அமைக்கலாம் என்று திரு. சிவ முத்துக்குமரப்பிள்ளை அவர்கள் உயிலிலே குறிப்பிட்டிருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, கருணை உள்ளத்தோடு அந்தப் பகுதியில் அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறுவதற்கு கல்லூரி ஒன்றினை அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக் கல்லூரி அமைக்க வேண்டும் என்று சொன்னால், குறைந்தபட்சம் 10 ஏக்கர் நிலம் தேவைப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிற இடத்தைப் பொறுத்தவரையில், ஒரு இடத்தில் 4.5 ஏக்கர், மற்றொரு இடத்தில் 6.5 ஏக்கர் என நிலம் தனித் தனியாக இருக்கின்ற காரணத்தினால், அந்த இடத்தில் கல்லூரி அமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. மேலும், உயர் கல்வியின் தேவையைக் கருதி, மாண்புமிகு தமிழக

2012 மே 8]

முதல்வர் அம்மா அவர்கள், இதுவரையில் வரலாற்றில் இல்லாத அளவிற்கு கல்லூரிகளைத் திறந்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 228, மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

228—

கசிவுநீர்க் குட்டை

*__11301—திருமதி த. இந்திராகாந்தி:__

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியத்திலுள்ள சங்கம்பட்டி அரசுப் புறம்போக்கு நிலத்தில் கசிவுநீர்க் குட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) துறையூர் தொகுதி, துறையூர் ஒன்றியத்திலுள்ள சங்கம்பட்டி அரசுப் புறம்போக்கு நிலத்தில், விவசாய நீர்த்தேக்கக் குட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

முற்பகல் 10-15

திருமதி த. இந்திராகாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணை இமை காப்பதுபோல் கழகத்தையும், தமிழக மக்களையும் கண் துஞ்சாது காத்துவரும் கழகத்தின் காவல் தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது துறையூர் தொகுதி